உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

श्रीकामकोटिग्रन्थावलिः १

XI. D. 31

श्रीसदाशिवब्रह्मेन्द्रकृतिषु

शिवमानसिकपूजा

कीर्तनानि

आत्मविद्याविलासः

इत्येतत्त्रयं आङ्गलानुवादद्राविडानुवादसहितं श्रीपरमहंस-
परिव्राजकाचार्य श्रीकाञ्ची कामकोटिपीठाधिप
जगद्गुरु श्रीचन्द्रशेखरेन्द्रसरस्वती
श्रीपादानां श्रीमुखेन
समुद्भासितम्

श्रीकामकोटिर्विजयते

[तृतीयं संस्करणम्]

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशितम्
४, फ्रानसिस् जोसफ् वीथी, मदरास् I

प्राप्यं कोशस्थानमेव] 1951 [मूल्यम् पञ्चदश आणकाः

அன்பளிப்பு

ஸ்ரீ

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம :

ஸ்ரீ ஸதாசிவேந்த்ர ப்ரஹ்மம் அருளிய

சிவமானஸிக பூஜா

கீர்த்தனங்கள் ...

ஆத்மவித்யாவிலாஸ

என்னும் ஸம்ஸ்க்ருத நூல்களும்

ஸ்ரீ வே. நாராயணன், எம். ஏ., எம். எல்.

செய்த தமிழ் ஆங்கில அனுவாதங்களும்

திருவாங்கூர் ஸம்ஸ்தானம் தலைமை நீதிபதி, திருப்புகழ்மணி

ஸ்ரீ T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள்

எழுதிய முகவுரையுடனும்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதிகளான

ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய திவ்ய ஸ்ரீமுகத்துடனும்

(மூன்றும் பதிப்பு)

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

4 பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

பதிப்புரிமை] 1951 [விலை அணா. 15

FOREWORD

BY

T. M. KRISHNASWAMY AIYAR, B.A., B.L.
Chief Judge, High Court, Trivandrum.

To be privileged to say a foreword to the second edition of the works of Sri Sadasiva Brahmendra is a great honour. A great Siddhar wrote:

பார்த்து நின்றதம்பலம் பரமனுமம்பலம்
கூத்து நின்றதம்பலம் கோரமானதம்பலம்
வார்த்தையானதம்பலம் வன்னியானதம்பலம்
சீற்றமான தம்பலம் தெளிந்ததேசிவாயமே.

The dance of the Lord is carried on without interruption all over and everything that strikes the eye, the ear or the sense is a stage in which the dance of Sri Nataraja can be seen. There are stages and stages in the world where this dance is going on and there are stages where his dance is more easily discovered than in other stages. The sense of the spoken word is of the Lord. The dance of the Lord can be discovered in that sense. Great men who have realised the absolute have erected many stages of words and song but none can surpass the simple beauty of the words of the great Sadasiva Brahmendra nor the dancing sense of Sri Nataraja in them. The dancer, the dance and the stage seem to get into one unified harmony in the words of Sri Sadasiva Brahmendra.

I appreciate in all delight the second edition of this work and I hope it will run to many more editions.

The demand for further editions of this work will in one sense be a true measure of the spread of the highest culture amongst the citizens of our land. As Sri Sadasiva Brahmendra transcended the limitations of his body in the realisation of the absolute, his realisations have transcended the limitations of the spoken word and the music of sounds. These works constitute the universal asset of one and all and it can only be by such publications as these that the undying asset of each man can ever be restored to him. The joy of self-knowledge and ecstasy of self-realisation will be his who cares for the permanent values of life. The translations in Tamil and English are particularly apposite to the universality of the instruction and gnana to be gained by the careful study of these works. The foreword that I would fain give to this edition will only be the prayerful expression of my heart's desire that the illumination of Sri Sadasiva Brahmendra may overwhelm me and the host of others and make us realise the true joy of undifferentiated love. May the encouragement of His Holiness Sri Sankaracharya Swamigal of Sri Kanchi Kamakoti Pitha to this publication be fruitful here in the same large measure as elsewhere.

12th March, 1944
TRIVANDRUM

T. M. KRISHNASWAMI AIYAR

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்

॥ श्रीः ॥

मुद्रा

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य
श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

श्रीचन्द्रमौळीश्वरकृपातरङ्गितकटाक्षपात्रीभूताः केचन अस्मत्प्रियान्तेवासिनः श्रीमूकपञ्चशती श्रीप्रश्नोत्तररत्नमाला श्रीमुकुन्दमाला भजगोविन्द श्रीविष्णुसहस्रनामस्तोत्रादीन् गरिष्ठान् ग्रन्थविशेषान् द्राविडानुवादैरस्माकं प्राकाश्यमनयन् अतीतयोरब्दयोः । तेन च सर्वेऽपि आस्तिकजनाः निरता वैदिकमार्गे भक्तिभावभरिता भगवति इत्येतत्खुविशदं प्रतिभाति । पुनश्च तदीयश्रद्धां वर्धयितुं समारब्धमस्ति किंचन श्रीकामकोटिकोशस्थाननाम्ना समुल्लिखितं स्थानम् । श्रीसदाशिवब्रह्मेन्द्रानुगृहीतौ शिवमानसिकपूजात्मविद्याविलासौ तथा सहृदयरञ्जनानि भक्त्युत्तंभनानि तदीयानि कीर्तनानि अन्यांश्च कांश्चन ग्रन्थविशेषान् तूर्णं प्राकाश्यं नीत्वा उपरिनिर्दिष्टं ग्रन्थपञ्चकं पुनश्च श्रीकामकोटिकोशस्थानप्रकाश्यतया मुद्राप्येत । श्रीकोशस्थानेन मुद्राप्यमाणानि पुस्तकानि सर्वेऽप्यास्तिकजनाः अनारतं पठन्तः भवेयुः श्रीचन्द्रमौळीश्वरदुरापकरुणाभाजनानि श्रेयसः परां कोटिम् आरूढाश्च ॥

चित्रभानु माघमास
कृष्णपक्षैकादशी भौमवारे
२–३–१९४३

नारायणस्मृतिः

ஸ்ரீ:

முத்திரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமச்
சங்கர பகவத்பாத ப்ரதிஷ்டித ஸ்ரீகாஞ்சீ
காமகோடி பீடாதிப ஜகத்குரு
ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீபாதர்களால்

ஸ்ரீசந்திரமௌளீசுவரருடைய கிருபையாகிய அலை பொங்குகின்ற அவரது கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களான எமது பிரிய சிஷ்யர்கள் சிலர் ஸ்ரீமூகபஞ்சசதீ, ப்ரஶ்னோத்தரரத்நமாலா, ஸ்ரீமுகுந்தமாலா, ஸ்ரீபஜகோவிந்தம், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம் முதலிய மிகச் சிறந்த நூல்களைத் தமிழ் அனுவாதங்களுடன் சென்ற இரண்டு ஆண்டுகளிலே வெளியிட்டார்கள்; அதனால் ஆஸ்திகர்கள் அனைவரும் வைதிக மார்க்கத்திலே பற்றுடையவர்களாய் பசவானிடத்து பக்தி மிகுந்தவர்கள் ஆனார்கள் என்பது மிகத் தெளிவாக விளங்குகின்றது. மேலும் இவர்களுடைய சிரத்தையை விருத்தி செய்வதற்காக, காமகோடி கோசஸ்தானம் என்ற பெயரைக் கொண்ட நிலயம் ஒன்று தொடங்கப் பெற்றுள்ளது. ஸ்ரீஸதாசிவ ப்ருஹ்மேந்த்ரர்கள் அருளிய ஶிவமானஸிக பூஜா, ஆத்மவித்யா விலாஸ: ஆகிய இரண்டு நூல்களையும், அவர்களே அன்பர்களுக்கு இன்பம் பயப்பதாகவும் பக்தியை வளர்ப்பதாகவும் அருளிய கீர்த்தனங்களையும் வேறு சில நூல்களையும் விரைவில் வெளியிட்ட பின்பு, மேலே குறிக்கப்பெற்ற நூல்கள் ஐந்தும் ஸ்ரீ காமகோடி கோச ஸ்தானப் பதிப்புகளாக அச்சிடப்பெற்று மீண்டும் வெளிவரும். ஸ்ரீ கோசஸ்தானத்திலே அச்சிடப்பெறும் புஸ்தகங்களை ஆஸ்திகர்கள் அனைவரும் இடைவிடாது பயின்று பெரும்பேறான ஸ்ரீ சந்த்ர மௌளீச்வரருடைய கருணைக்குப் பாத்திரர்களாய் உயர்வற்ற வுயர்நலத்திலே நிலைபெற்று விளங்குவார்களாக.

சித்ரபானு மாகமாஸ க்ருஷ்ணபக்ஷ ஏகாதசி செவ்வாய்க்கிழமை, 2-3-43.	நாராயண ஸ்ம்ருதி:

ஓம் ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மணே நம:

முன்னுரை

ஸ்ரீஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்கள் காவேரி தீரத்தில் அவதரித்து பால்யத்திலே திருவிசைநல்லூர் என்னும் கிராமத்திலேயுள்ள மஹாவித்வான்களிடம் வித்யாப்யாஸஞ் செய்தார்கள். பால்யத்திலே வேதாத்யயனமும் வேதாந்த விசாரமும் செய்தபின், யோகமார்க்கத்திலும் ஆத்ம ஜ்ஞானத்தை நாடும் வேதாந்த விசாரத்திலும் தமக்குத்தகுந்த குரு ஸ்ரீ பரமசிவேந்த்ரஸரஸ்வதி அவர்களே என்று கருதி அவர்களுடைய மஹா ஸந்நிதானத்தில் அந்தேவாஸியாக பல ஆண்டுகள் இருந்தார்கள்.

இவர்கள் யோக ஸூத்ர வ்ருத்தி, ப்ரஹ்மஸூத்ர வ்ருத்தி என்னும் வ்யாக்யானங்களையும் வேறு சில பிரகரண க்ரந்தங்களையும் இயற்றி யருளினார்கள். ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர்கள் இயற்றிய ஸித்தாந்த லேசஸங்க்ரஹத்தை யொட்டி ஸித்தாந்த கல்பவல்லீ என்னும் நூலையும் இயற்றியருளினார்கள். ஸ்ரீபகவானையும் அத்வைத அநுபவங்களையும் பற்றி அநேக கீர்த்தனங்களை இயற்றினார்கள். இவையெல்லாம் தமது ஸ்ரீ குருமூர்த்திகளின் திருவருளாலேதான் என்பதை 'ஹம்ஸ' என்றும், 'பரம ஹம்ஸ' என்றும் குருமுத்திரை வைத்துப் பாடிக் காட்டி யிருக்கிறார்கள். 'ப்ரஹ்மைவாஹம் கில' என்னும் கீர்த்தனத்திலே, "ஸத்குருவின் கிருபையாலேயே, 'ப்ரஹ்மம் வேறு, நான் வேறு' என்ற அஜ்ஞானத்தைக் கடந்து, நானே ப்ரஹ்மமாய் இருப்பதை உணர்ந்தேன்" என்று பாடியிருக்கிறார்கள். ஜீவஸ்வரூபத்தை நன்கு விளக்கும் "தத்வஜ்ஜீவத்வம்" என்னும் கீர்த்தனத்திலும் பரம ஹம்ஸர்களான குருமூர்த்திகளே அத்வைத ஜ்ஞானத்தை உபதேசித்து மாயையையும் அவித்யையையும் நீக்கினார்கள் என்று விளக்கி யிருக்கிறார்கள். "ஸ்ரீ பரம சிவேந்திரர்கள் சந்திரன், நான் எல்லையற்ற ஆனந்த ஸாகரம்: ஸாகரம் சந்திரனைக் கண்டு பொங்கி உத்கோஷிப்பதுபோல, குருமூர்த்திகளின் ஸந்நிதியில் ஆனந்தம் பொங்கி நான் சந்தோஷிக்கிறேன்" என்றும், தீரர்களான பரமசிவேந்திரர்கள் என்னும் குருமூர்த்திகளாலே போதிக்கப் பெற்று நான் அகண்ட ஸச்சிதானந்தப்பொருள் என்பதை உணர்ந்தேன்" என்றும், தமக்கு நேர்ந்த ப்ரஹ்மானுபவ சுகத்

தைப்பற்றி “ஆனந்த பூர்ண போதோऽஹம்” என்னும் இரண்டு கீர்த்தனங்களிலும் “பூர்ணபோதோஹம்” என்னும் கீர்த்தனத்திலும் பாடியிருக்கிறார்கள்; ஸ்ரீ ராமாவதார கிருஷ்ணாவதார தத்துவங்களையும் தான் குருமுகத்தாலே அறிந்ததாகப் பாடியுள்ளார்கள். ஸச்சிதானந்தப் பொருளே ஸ்ரீராமன், தஹராகாசமே ஸ்ரீ அயோத்யை, சாந்தியே வைதேஹீ, ராகத்வேஷாதிகளே அரக்கர்கள், அஜ்ஞானமே மஹா சமுத்திரம், அதனை ஆஞ்ஜனேயரை போலக் கடந்து செல்வதற்கு ஸ்ரீ ராமனாகிய பரப்ரஹ்மமே தாரகமாயுள்ளது” என்று ஸ்ரீமத் ராமாயணத்தின் வேதாந்தப் பொருளை விளக்கியுள்ளார்கள். [1] ‘ஶிவ மானஸிக பூஜா’ என்னும் சிறு நூலும் ஸகுண ப்ரஹ்மமாகிய பரமசிவனை, அத்வைத ஸித்தாந்தத்திற்கு அனுகுணமான சிறந்த முறையிலே உபாஸிப்பதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. ‘ஸர்வம் ப்ரஹ்ம மயம்’ என்னும் கீர்த்தனத்திலே குறிக்கப்பெற்ற ஹம்ஸத்யானமே [2] இவர்களுக்கு ஆசார்யர்களால் உபதேசிக்கப் பெற்றதுபோலும்.

ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்களுக்கு சாஸ்திரப் பயிற்சியும் ஸத்குருவின் உபதேசமும் கிடைத்ததும், அத்வைத ஜ்ஞானம் அனுபவ ஸித்தமாயிற்று. ஸ்ரீ குருமூர்த்திகளின் மஹாஸந்நிதானத்திற்கு வரும் சாஸ்திரஜ்ஞர்களோடு இவர்கள் அடிக்கடி தர்க்கஞ் செய்வதைக் கண்ட ஸ்ரீ குருமூர்த்திகள் ஒரு சமயம் ‘மௌனியாயிரு’ என்று ஆஜ்ஞை செய்தார்களாம்; அது முதற்கொண்டு இவர்கள் மஹா மௌனிகளாகவே விளங்கினர். குருமூர்த்தி

---

[1] ஸ்ரீ பரமசிவேந்திரர்களின் இயற்பெயர் ‘சிவராம கிருஷ்ண” என்பது பற்றியே “ஶிவமானஸிகபூஜா” ஸ்ரீராம கீர்த்தனங்கள் ஸ்ரீகிருஷ்ண கீர்த்தனங்கள் அமைந்தனபோதிலும். ஸதா சிவப்ரஹ்மேந்திரர்களின் இயற்பெயரும் ‘சிவராமகிருஷ்ண’ என்பதே என்று சொல்கிறார்கள்.

இந்த ஹம்ஸத் தியானத்தைப்பற்றி ‘காமகோடி’யில் (சித்ரபானு, கார்த்திகை, 9உ) இவ்வாறு கூறப்பட்டுள்ளது. “இயற்கையில் ஒவ்வொரு பிராணியும் தன் தன் காரியத்தைச் செய்துகொண்டே இருக்கின்றது. ச்வாஸம் உட்செல்லும்பொழுது ‘ஹ’கார நாதமும் அநுஸ்வாரமென்னும் ஓர் முடிவும் ஏகாந்தமாக த்யானித்துக் கவனித்தால் புலப்படுகின்றது. அதுபோலவே ச்வாஸம் வெளிப்படும்போது ‘ஸ’கார நாதமும் ஓர் முடிவில்லாமல்

களிடத்தில் அனுபவ பூர்வகமாய்க் கண்டறிந்த ஞானவிலாஸங்களைக் கொண்டே, இவர்கள் ஆத்மஜ்ஞானியின் பரம லக்ஷணங்களை 'ஆத்ம வித்யாவிலாஸ:' என்னும் நூலிலே மிக அழகாக வர்ணித்துள்ளார்கள். இந்த ஞான விலாஸங்கள் அனைத்தும் இவர்களிடமும் காணப்பெற்றன. சிவ மானஸிக பூஜையின் பயனாக சந்திரமௌளீசுவரரின் க்ருபையைப்பெற்றுக் குருமூர்த்திகளின் உபதேசங்களின்படி நடந்தும் அவர்களுடைய பாதுகைகளைச் சிரமேற்கொண்டு எல்லாச் சிந்தைகளும் சங்கைகளும் நீங்கப்பெற்று, சமம், தமம், கருணை முதலிய நற்குணங்களால் நிரம்பியவராகி இந்திரியங்களை ஒடுக்கியும், காமங்களையெல்லாம் வென்றும், உள்ளங்கையை பிக்ஷாபாத்திரமாகக் கொண்டு அவதூத ஸந்நியாஸிகளாக எங்கும் திரிந்தும், காவேரி மணல்மேடுகளிலும் கரையோரத்துப் புதர்களிலும் மரத்தடியிலும் அமர்ந்தும், 'ஸர்வத்ர ஸதா ஹம்ஸத்யான'த்திலேயே ஆழ்ந்திருந்தார்கள். இவர்களுடைய புகழ் நாடெங்கும் பரவிற்று.[1]

இவர்களைப்பற்றிப் பல அற்புதங்கள் கர்ண பரம்பரையாகக் கூறப்படுகின்றன. ஜடபரதரைப்போலத் திரிந்த இவர்களுடைய தலைமேலே ஒருசமயம் விறகு கட்டு ஒன்று சுமத்தப்பட்டதாம். வேறொரு சமயம் நெற்குவியலின்மேல் மெய்மறந்து படுத்திருந்த இவர்களைத் திருடனைக் கருதி அடிக்க வந்தார்களாம். அடிக்க ஓங்கின கைகள் ஸ்தம்பித்துநின்றனவாம். இன்னொரு சமயம், கொடுமுடிக்கருகே காவேரி மணல் மேட்டிலே ஹம்ஸத்யானத்திலமர்ந்திருந்த இவர்களை புது வெள்ளம் புரட்டிக்கொண்டு போய் சிறிது தூரத்தில் மணலுள் செருகிவிட்டதாம். மூன்று மாதத்

வெளிப்படுதல் என்ற பொருளையுடைய விஸர்க்கமும் த்யாணிககத் தோன்றும். இதுவே ஸகல ப்ராணிகளும் ப்ரயத்னமில்லாமல் எக்காலத்திலும் இயற்கையில் செய்யும் மந்திரயோகம். இந்த 'ஹம்ஸ' மந்திரத்தை இவ்விதம் கவனித்து அறிந்தவன் பரமஹம்ஸன். இந்த மந்த்ர ஜபத்திற்கு ப்ரயத்னம் வேண்டியதில்லை; காலநியமமும் இருக்கமுடியாது. தேச நியமமும் இருக்கமுடியாது...இந்த இயற்கை ஹம்ஸ மந்திரத்தால பரம நிஷ்டையாய் வழிபடுவரே பரமஹம்ஸர். இதையே சாஸ்திர குருவுபதேச அனுபவங்களால் முறைப்படி அறிந்து அதிலேயே ஈடுபடுபவர் பரமஹம்ஸர்.

[1] பரம மௌனிகளாக விளங்கிய இவர்களை அக்காலத்துப் புதுக்கோட்டை மன்னன் உபாஸித்தான் என்றும் அம்மன்னனுக்கு இவர்கள் மௌனோபதேசமாக எழுதிக்காட்டிய மணலை இன்றும் அந்த ஸம்ஸ்தானத்திலே அரும்பொருளாகச் சேமித்துப் போற்றி வருகிறார்கள் என்றும் சொல்கிறார்கள்.

திற்குப் பின்பு, இவர்களுடைய தேஹம் அத்ருஷ்ட வசத்தால் தோண்டியெடுக்கப் பெற்றபோது, யாதுமறியாதவர்களாய் தியானத்திலிருந்து எழுந்து சென்றார்களாம். மற்றொரு சமயம், கோயில் கர்ப்பக்ருஹத்திற்கு வெளியிலே நின்றுகொண்டு இவர்கள் சிவநாமாவளி அர்ச்சனையை உச்சரித்தபோது, ஒவ்வொரு நாமத்திற்கும் ஒரு பூ மூலஸ்தான லிங்கத்தின் மீது உதிர்ந்ததாம்.

ஒரு தடவை இவர்களுடைய கை மிலேச்சனால் வெட்டப்பட்ட போதும் இவர்கள் அதை உணரவில்லையாம். அதைக் கண்டு பயந்த மிலேச்சன் இவர்களைத் தொடர்ந்து சென்று மன்னிப்பு வேண்டிய போதுதான் விஷயம் தெரிந்ததாம்; அப்பொழுதும் அந்த மிலேச்சனிடம் கருணையே காட்டினார்களாம். இவர்களைத் தரிசித்தவர்கள் அனைவரும் பரிசுத்தர்களாகி தாங்கள் விரும்பிய பலன்களையெல்லாம் உடனே பெறுவார்களாம். "விக்னேச்வரரை உபாஸித்தும் நீங்காத இடையூறு இவர்களை ஸ்மரிப்பதாலே நீங்கி விடும்" என்று ஸதாசிவேந்த்ர ஸ்துதியிலே [1] கூறப் பெற்றுள்ளது.

ஒரு சமயம் மதுரையிலே நடந்த ரிஷபவாஹன மஹோத்ஸவத்திற்கு காவேரிக் கரையில் ஓரூரிலே விளையாடிக்கொண்டிருந்த சிறு பிள்ளைகளை கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் ஆகாய மார்க்கமாக அழைத்துக்கொண்டுபோய் ஸ்வாமி தர்சனம் செய்வித்து பக்ஷணங்களை வாங்கிக் கொடுத்துத் திரும்பவும் ஊரிலே கொணர்ந்து விட்டார்களாம். மேலும் ஒரே சமயத்தில் வெவ்வேறு தேவாலயங்களிலே இவர்கள் ஸ்வாமி தர்சனம் செய்து கொண்டிருப்பதாகக் காணப்பட்டார்களாம். இவற்றையும் வெட்

---

[1] 'ஸதாசிவேந்த்ர ஸ்துதி' 45 ஆர்யா ச்லோகங்கள் கொண்டது. இது நெரூரிலே ஸமாதி கொண்டருளிய ஸதாசிவ ப்ரஹ்மத்தின் ஸந்நிதியிலே ஸ்ரீ ஜகத் குரு சிருங்ககிரி ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளால் பாடப் பெற்றது. ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ முத்ரா யந்த்ராலயத்தில் அச்சிடப் பெற்றது.

டுண்ட கை மீண்டும் ஒட்டிக்கொண்டதையும் இவர்களுடைய யோக ஸித்திகளுக்கு நிதர்சனமாகக் கூறுவதுண்டு.[1]

இவர்கள் இப்படி வெகுகாலம் ஜீவன்முக்தர்களாய், அத்வைத ஸித்தாந்தத்தை மெய்ப்பிக்கும் சிறந்ததோர் நிதர்சனமாய், ஸச்சிதானந்தமான சுத்த ப்ரஹ்மமாகவே விளங்கினார்கள். இவர்கள் அருளிய கீர்த்தனங்களிலும் இதர கீர்த்தனங்களிலும் காணும் ப்ரஹ்ம லக்ஷணங்கள் யாவும் இவர்களிடம் காணப் பெற்றனவாதலால் இவர்கள் 'ஸதாசிவ ப்ரஹ்மம்' என்று பிரஸித்தி பெற்றார்கள். இவர்கள் முன்னதாகவே அறிவித்த பிரகாரம், தக்ஷிண வாஹினியாக ப்ரவஹிக்கும் காவேரியின் மேற்கரையிலே நெரூரிலே கிழக்கு நோக்கி ஸமாதி கொண்டருளினார்கள்.[2]

ஸதாசிவப் ப்ரஹ்மத்தின் கருணையைப் பெற்றால், காமியும் எல்லாக் காமங்களையும் வென்றவனாவான், கொடியவனும் பரம சாந்தனாவான், அறிவீனனும் பேரறிவாளனாவான்' என்பது ஆன்றோர் வாக்கு. ஆதலால், ஸதாசிவ ப்ரஹ்மத்தை அடிவணங்கியும் அவர்களுடைய திருவாக்குகளைப் பயின்றும் கீர்த்தனங்களைப் பாடியும் நாம் அனைவரும் அஜ்ஞானம் நீங்கப் பெறுவோமாக.

[3] कामिनमपि जितहृदयं क्रूरं शान्तं जडं सुधियम् ।
कुरुते यत्करुणाऽस्मै प्रणतिं कुर्मः सदाशिवेन्द्राय ॥

20—3—43 வே. நாராயணன்.

---

[1] இவர்களுடைய திருவருள் பெற்றதாலேயே, கல்வியறிவு ஒருசிறிதும் இல்லாத வெறும் பிரம்மசாரி ஒருவர் மஹா வித்வானாகி அரசசபையிலே புராணப் ப்ரவசனஞ் செய்து சம்மானங்களைப் பெற்றார் என்றும், அவருடைய சந்ததியார் இன்றும் நெரூரில் இருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள்.

[2] இந்த நெரூர் என்னும் ஸ்தலம் கரூருக்கு 7 மைல் தூரத்திலுள்ளது. ஜ்ஞான நேத்ர க்ஷேத்ரமாகும் இந்த நெரூரென்னும் ஊர். இவர்களுடைய குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீ பரமசிவேந்த்ர பரமஹம்ஸர்களின் அதிஷ்டானம் "மணிகர்ணிகா" காவிரியின் கரையில் மேற்குநோக்கி நெரூருக்கு அபிமுகமாக நிற்கின்றது. தஞ்சை ஜில்லா சீர்காழிக்கு சமீபமாக உள்ள இந்த திருவெண்காடு என்னும ச்வேதாரண்ய ஸ்தலம் ப்ரஹ்ம வித்யா க்ஷேத்ரம்; இந்த க்ஷேத்திரத்தில் விளங்கும் அம்பிகைக்கு ப்ரஹ்ம வித்யாம்பிகை என்று பெயர்".

[3] ஸதா ஶிவேந்த்ர ஸ்துதி, 30.

अस्मिन्नपि समये मम कण्ठच्छायाविधूतकालाभ्रम् ।
अस्तु पुरा वस्तु किमप्यर्धाङ्गोदारमुनिभिर्जटिलम् ॥

—शिवमानसिकपूजा, २८

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

XI. D. 31.

॥ ॐ शिवाभ्यां नमः ॥

ஓம் ஶிவாஹ்யாம் நம:

॥ शिवमानसिकपूजा ॥

ஶிவமானஸிகபூஜா

अनुचितमनुलपितं मे त्वयि ननु शंभो तदागसः शान्त्यै ।
अर्चां कथमपि विहिता-मङ्गीकुरु सर्वमङ्गलोपेत ॥ १ ॥

அனுசிதமனுலபிதம் மே
த்வயி நநு ஶம்போ ததாகஸ: ஶாந்த்யை |
அர்(ச்)சாம் கதமபி விஹிதாம்—
அங்கீகுரு ஸர்வமங்கலோபேத ॥ (1)

शंभो ஶம்புவே! **त्वयि** உன்னைப்பற்றி **अनुचितं** பொருத்தமற்றது **ननु** நிச்சயமாக **अनुलपितं मे** என்னால் அடிக்கடி பிதற்றப்பட்டது; **तदागसः शान्त्यै** அந்தக் குற்றத்திற்குச் சாந்திக்காக, **विहितां** நியமமாகச் செய்யும் **अर्चां** பூஜையை **कथं अपि** எப்படியோ ஒருவாறு **अङ्गीकुरु** ஏற்றுக்கொள்; **सर्वमङ्गलोपेत** பார்வதியோடு கூடியவனே! (எல்லா மங்களங்களும் பொருந்தியவனே!)

'ஸர்வமங்கலா' என்பது தேவியின் பெயர்.

Siva by whose side is Uma (in whom all bliss abides)! Verily have I prated words unworthy of you; this worship offered in due manner to rid me of that sin—deign to accept even this.

ध्यायामि कथमिव त्वां धीवर्त्मविदूरदिव्यमहिमानम् ।
आवाहनं विभोस्ते देवाग्र्य भवेत् प्रभो कुतः स्थानात् ॥ २ ॥

த்யாயாமி கதமிவ த்வாம்
தீவர்த்மவிதூரதிவ்யமஹிமானம் ।
ஆவாஹனம் விபோஸ்தே
தேவாக்ர்ய பவேத் ப்ரபோ குத: ஸ்தானாத் ॥

धीवर्त्मविदूरदिव्यमहिमानं புத்தி பார்க்கத்திற்கு அப்பால் (புத்திக்கு எட்டாதபடி) உள்ள திவ்வியமான மகிமையை யுடைய **त्वां** உன்னை **कथं इव** எவ்வாறுதான் **ध्यायामि** தியானஞ் செய்வேன்? **देवाग्र्य** தேவர்களுள் முதல்வனே! **प्रभो** (என்) தலைவனே! **कुतः स्थानात्** குறிப்பிட்ட எந்த இடத்திலிருந்து **विभोः ते आवाहनं** எங்கும் வியாபித்திருக்கும் உன்னை அழைத்து ஆவாஹனஞ் செய்வது (எழுந்தருளச் செய்வது) **भवेत्** முடியும்?

குறிப்பு: மனதிற்கு எட்டாதவனை மனனஞ் செய்வது எப்படி? எல்லாவற்றிலும் ஊடுருவியிருப்பவனை ஓரிடத்தில் ஆவாஹனஞ் செய்வது எப்படி?

How may I ever contemplate you whose divine greatness far transcends the ways of thought? Foremost among the Gods! My Lord! How may I invoke you here, from what abode of One who abides everywhere?

कियदासनं प्रकल्प्यं कृतासनस्येह सर्वतोऽपि शिव ।
पाद्यं कुतोऽर्घ्यमपि वाऽऽपाद्यं सर्वत्रपाणिपादस्य ॥ ३ ॥

கியதாஸனம் ப்ரகல்ப்யம்
    க்ருதாஸனஸ்யேஹ ஸர்வதோऽபி ஶிவ ।
பாத்யம் குதோऽர்க்யமபி வா
    பாத்யம் ஸர்வத்ரபாணிபாதஸ்ய ॥ (3)

शिव சிவபிரானே! **सर्वतः अपि** எங்குமே **कृतासनस्य** அமர்ந்திருப்பவனுக்கு **इह** இங்கே **कियत् आसनं** எவ்வளவு பெரிய ஆஸனம் (மணை) **प्रकल्प्यं** அமைக்கவேண்டும்? **सर्वत्र पाणिपादस्य** எல்லாப்புறத்திலும் கைகால்களையுடையவனுக்கு **पाद्यं** பாத்யமோ **अर्घ्यं वा** அல்லது அர்க்கியமோ **कुतः** எவ்வாறு **आपाद्यं** ஸமர்ப்பிக்க முடியும்?

Siva! What throne may here be provided for One who is enthroned everywhere? And how may water be offered for washing the feet or for holding in the hand, of One whose hands and feet are everywhere.

आचमनं ते स्यादपि भगवन् भव सर्वतोमुखस्य कथम् ।
मधुपर्को वा कथमिह मधुवैरिणि दर्शितप्रसादस्य ॥ ४ ॥

ஆசமனம் தே ஸ்யாதபி
    பகவன் பவ ஸர்வதோமுகஸ்ய கதம் ।
மதுபர்(க்)கோ வா கதமிஹ
    மதுவைரிணி தர்ஶிதப்ரஸாதஸ்ய ॥ (4)

भव பவனே! **भगवन्** பகவானே! **सर्वतोमुखस्य ते** எல்லாப்புறமும் முகங்களை (வாய்களை)யுடைய உனக்கு **आचमनं अपि** ஆசமனமும், அதாவது, மந்திரத்துடன் உச்சரித்து ஜலத்தை உட்கொள்ளச் செய்வதும் **कुतः**

स्यात् எப்படி அமையும்? **वा** அல்லது, **इह** இங்கே **मधुपर्कः** மதுபர்க்கம் (தேன் நெய் தயிர் கற்கண்டு ஜலம் இவற்றைக் கலந்த பானம்) **मधुवैरिणि** மது என்னும் அரக்கனைப் பகைத்து ஸம்ஹாரஞ் செய்த (தேனைப் பகைக்கின்ற) விஷ்ணுவினிடத்தில் **दर्शितप्रसादस्य** அருளைக் காட்டிய வனுக்கு **कथम्** எப்படிப் பொருந்தும்?

சிலேடைக் குறிப்பு : மது : தேன், மது என்னும் அரக்கன்

And how can water for the Achamana rite be served, O Bhava, Lord! to One who has faces everywhere? Or (honey-mixed) Madhuparka to One who is gracious to the enemy of Madhu (Vishnu).

Madhu means 'honey' as well as 'a Rakshasa killed by Vishnu'.

स्नानेन किं विधेयं सलिलकृतेनेह नित्यशुद्धस्य ।
वस्त्रेणापि न कार्यं देवाधिपते दिगम्बरस्येह ॥ ५ ॥

ஸ்நானேன கிம் விதேயம்
ஸலிலக்ருதேனேஹ நித்யஶுத்தஸ்ய |
வஸ்த்ரேணாபி ந கார்யம்
தேவாதிபதே திகம்பரஸ்யேஹ || (5)

नित्यशुद्धस्य எப்பொழுதும் பரிசுத்தமா யிருப்பவனுக்கு **इह** இங்கே **सलिलकृतेन** தீர்த்தத்தாலே செய்யும் **स्नानेन** ஸ்நானத்தால் **किं विधेयं** ஆகவேண்டியது என்ன? **देवाधिपते** தேவர்களுக்குத் தலைவனே! **दिगम्बरस्य ते**

திசைகளையே ஆடையாகவுடைய உனக்கு इह இங்கே वस्त्रेण अपि வஸ்திரத்தாலுமே न कार्यं பயன் இல்லை.

What need is there for bathing now in water to One who is ever pure? And, O Lord of the Gods! of what use are garments to you whose garments are the very ends of space?

स्फुरति हि सर्पाभरणं सर्वाङ्गे सर्वमङ्गलाकार ।
अतिवर्णाश्रमिणस्तेऽस्त्युपवीतेनेह कःस्विदुत्कर्षः ॥ ६ ॥

ஸ்புரதி ஹி ஸர்(ப்)பாபரணம்
ஸர்வாங்கே ஸர்வமங்கலாகார |
அதிவர்ணாஶ்ரமிணஸ்தே
ऽஸ்த்யுபவீதேனேஹ க:ஸ்விதுத்கர்ஷ: || (6)

सर्वमङ्गलाकार பார்வதியைத் தேகத்தில் உடையவனே! (எல்லா மங்களங்களும் அமைந்த வடிவையுடையவனே!) सर्पाभरणं ஸர்ப்பங்களாகிய ஆபரணம் सर्वाङ्गे எல்லா அவயவங்களிலும் स्फुरति हि மின்னுகிறதே! अतिवर्णाश्रमिणः ते வர்ணாசிரம நெறிகளைக் கடந்த உனக்கு इह இங்கே उपवीतेन உபவீதத்தால (பூணூலால்) कः स्वित् उत्कर्षः अस्ति என்னதான் (சிறப்பு) மேன்மை உண்டு?

குறிப்பு : 'உமையலாலுருவமில்லை' என்பது தேவாரம்.

You whose form is Uma (whose form is all auspicious)! Serpents glitter as jewels all over your body. (Therefore what ornaments shall I offer you?) And now, what is the value of *Upavita* (the holy thread) to you who are beyond *Varna* and *Asrama* (caste and status)?

गन्धवती हि तनुस्ते गन्धाः किं नेश पौनरुक्त्याय ।
पुष्करफलदातारं पुष्करकुसुमेन पूजये किं त्वाम् ॥ ७ ॥

கந்தவதீ ஹி தநுஸ்தே
கந்தா: கிம் நேஶ பௌநருக்த்யாய |
புஷ்கரபலதாதாரம்
புஷ்கரகுஸுமேன பூஜயே கிம் த்வாம் || (7)

ईश ஈசனே! **ते** உன் **तनुः** சரீரம் **गन्धवती हि** சுகந்தமுடையது (பூமி) அன்றோ? **गन्धाः** வாசனைத் திரவியங்கள் **पौनरुक्त्याय किं न** மிகையாவதற்கே அல்லவா? **पुष्कर-फलदातारं** புஷ்கலமான (நிரம்பிய) பலனையளிக்கும் **त्वां** உன்னை **पुष्करकुसुमेन** (புஷ்கரமென்னும்) தாமரைப்பூவாலே **किं पूजये** நான் பூஜிப்பதா?

குறிப்பு: புஷ்கரம்: நிறைவு, தாமரை; பலம்: பழம், பயன் "பூ முதிர்ந்துதானே பழம் ஆகும்? பழத்தைக் கொடுப்பவனுக்கு பூவைக் கொடுப்பதா?" என்பது கருத்து.

Your body is the Earth (which is ever fragrant; to you, O Lord, perfumes are superfluous. How can I worship you with a lotus flower, who have given me (favours) fruits in plenty.

The word 'Pushkara' means 'a lotus' and 'plenty'; and the stress, by way of contrast, is on *kusuma* (flower) and *phala* (fruit).

श्रमधनमूलधनं त्वं सकलेश्वर भवसि धूपितः केन ।
दीपः कथं शिखावान् दीप्येत पुरः स्वयंप्रकाशस्य ॥ ८ ॥

ஶமயனமூலயனம் த்வம்
ஸகலேஶ்வர ஹவஷி யதபிதஃ கேன |
தீபஃ கயம் ஶிகாவான்
தீப்யேத புரஃ ஸ்வயம்ப்ரகாஶஸ்ய || (8)

सकलेश्वर எல்லோர்க்கும் ஈசுவரனை இருப்பவனே! **शमधनमूलधनं** சமம் என்னும் செல்வத்திற்கு (அல்லது சமத்தைத் தனமாகக் கொண்ட முனிவர்களுக்கு) மூல தனமான **त्वं** நீ **केन** யாரால் (அல்லது எதனால்) **धूपितः** தூபங் காட்டப் பெற்றவனை (தூபுறுத்தப் பட்டவனை. **भवसि** ஆகிறாய்? **स्वयंप्रकाशस्य पुरः** தானே சோதிமயமா யுள்ளவனுக்கு முன்னால் **दीपः** தீபம் (திருவிளக்கு) **कथं** எப்படி **शिखावान्** ஜ்வாலையுடையதாய் **दीप्यते** (ஒளிவீசும்?) பிரகாசிக்கும்?

Lord of all things! Who can offer incense to you, who are the basis of self-control? Before the Self-luminous One, how can the lamp (of worship) shine, lifting up its head?

अमृतात्मकमपि भगवन्नशनं किन्नाम नित्यतृप्तस्य ।
त्वय्याम्रेडितमेतत् ताम्बूलं यदिह सुमुखरागेऽपि ॥ ९ ॥

அம்ருதாத்மகமபி பகவன்
அஶனம் கிந்நாம நித்யத்ருப்தஸ்ய |
த்வய்யாம்ரேடிதமேதத்
தாம்பூலம் யதிஹ ஸுமுகராகே஽பி || (9)

भगवन् பகவானே! **अमृतात्मकं अशनं अपि** அமுதமயமான உணவேயாயினும் **नित्यतृप्तस्य** எப்பொழுதும் திருப்தியடைந்திருப்பவனுக்கு **किं नाम** என்னே? **सुमुखरागे**

त्वयि சிவந்த வாயையுடைய உனக்கு **यत् ताम्बूलं एतत् अपि** இந்த வெற்றிலை யென்பதும் **आम्रेडितं** பயனற்ற மிகைப் பொருளே.

கீழேடைக் குறிப்பு: ஸுமுகராக: (1) சுகதுக்கங்கள் என்ற த்வந்த்வங்களால் மாறுத முகசோபையுள்ளவன் (2) நன்ருகச் சிவந்த வாயை யுடையவன்.

Lord! Of what use is the offering of food, although it be the essence of nectar, to One who is ever sated? And this offering of betel leaves is a superfluity now to you whose face is bright (whose mouth is ever ruddy).

Sumukharaga means (1) 'one whose face is bright' (in sorrow as well as in joy), (2) 'one who has ruddy lips.'

उपहारीभूयादिदमुमेश यन्मे विचेष्टितमशेषम् ।
नीराजयामि तमिमं नानात्मानं सहाखिलैः करणैः ॥१०॥

உபஹாரீபூயாதிதம்
உமேஶ யன்மே விசேஷ்டிதமஶேஷம் |
நீராஜயாமி தமிமம்
நாநாத்மானம் ஸஹாகிலை: கரணை: || (10)

उमेश உமாதேவியின் நாதனே! **यत् मे विचेष्टितं इदं** என்னுற் செய்யப்பட்டதான இது **अशेषं** முழுவதும் **उपहारीभूयात्** (உனக்கு) வழிபாடாக (நிவேதனமாக அமையட்டும். **नानात्मानं तं इमं** பல வடிவுகளை யுடையவனை இதோவுள்ள தங்களை (தங்களுக்கு) **अखिलैः करणैः सह** எல்லாக் கரணங்களாலும (மெய் வாக்கு மனம் ஆகிய

மூன்று கரணங்களாலும்) **नीराजयामि** நீராஜனம் காட்டுகிறேன் (ஒளி பெறச் செய்கிறேன்).

Lord of Uma (Parvati)! May all this that I do be accepted as my offering! And with every one of my sense organs (as lit lamps), I perform *Nirajana* (waving lights as an act of worship to Him who has all these diverse Forms.

सुमनश्शेखर भव ते सुमनोऽञ्जलिरेष को भवेच्छंभो ।
छत्रं द्युमन् द्युमूर्ध्नश्चामरमपि किं जितश्रमस्य तव ॥ ११ ॥

ஸுமனஶ்ஶேகர ஭வ தே
ஸுமனோஞ்ஜலிரேஷ கோ ஭வேச் ஶம்போ |
சத்ரம் த்யுமன் த்யுமூர்த்ன:
சாமரமபி கிம் ஜிதஶ்ரமஸ்ய தவ || (11)

भव பவதேவனே! **शंभो** சம்புவே! **सुमनश्शेखर** தேவர்களுக்குத் தலைவனே! (மலர்சூடிய திருமுடி யுடையவனே!) **ते** உனக்கு **एषः सुमनोऽञ्जलिः** கைகூப்பி ஸமர்ப்பிக்கும் இந்தப் புஷ்பம் **कः भवेत्** என்ன ஆகும்? **द्युमन्** ஏ ஒளியுடையோனே! (வானத்தை இடமாக வுடையவனே!) **द्युमूर्ध्नः** வானத்தைத் தலையாக வுடையவனுக்கு **छत्रं** குடையும் **जितश्रमस्य तव** சிரமத்தை வென்ற உனக்கு **चामरं अपि** சாமரமும் **किं** ஏன்?

குறிப்பு: ஸுமனஸ்: தேவர். புஷ்பம் (மலர்). மலர்ந்த பூக்களைத் தலையிலணிந்தவனுக்கு மலராது கூம்பிய மொட்டுப் போன்ற புஷ்பாஞ்ஜலி எதற்கு! வானத்திற்கு அப்பால் ஊடுருவிச் செல்லும் தலைக்கு மேலே குடைபிடிப்பது எப்படி!

Supreme God (*Sumanas-Sekhara*)! Sambhu! Bhava! What avails this offering of flower to you

with folded palms? You who are bright! (who are in the sky!) How can there be an umbrella for one whose head is beyond the heavens or a Chamara (whisk) for you who have overcome fatigue?

'Sumanas' means 'a flower' as well as 'god'. The contrast is between the (blown) flower and the *anjali* pose of the folded palms of hand (which resembles a closed bud).

नृत्यं प्रथतां कथमिव नाथ तवाग्रे महानटस्येह ।
गीतं किं पुरवैरिन् गीतागममूलदेशिकस्य पुरः ॥ १२ ॥

ந்ருத்யம் ப்ரதாம் கதமிவ
நாத தவாக்ரே மஹாநடஸ்யேஹ |
கீதம் கிம் புரவைரின்
கீதாகமமூலதேஶிகஸ்ய புர: || (12)

नाथ நாதனே! **इह** இங்கே **महानटस्य तव अग्रे** மஹா நடனாகிய (பெரிய நர்த்தனாகிய) உன் முன்னிலையில் **कथं इव** எவ்வாறுதான் **नृत्यं** நடனம் **प्रथतां** நடக்கும்? **पुरवैरिन्** பகை கொண்டு முப்புரங்களை அழித்தவனே! **गीतागममूलदेशिकस्य पुरः** ஸங்கீத சாஸ்திரத்திற்கு மூலமான ஸாமவேதத்தின் ஆதி குருவிற்கு முன் **गीतं किम्** என்ன ஸங்கீதம்?

Lord! How can any dancing be done here before you who are the Great Dancer? Destroyer of the Triple City! What song can be sung before the Teacher of (the Sama Veda) the primordial science of music?

**वाद्यं डमरुभृतस्ते वादयितुं वा परेऽस्ति का शक्तिः ।
अपरिच्छिन्नस्य भवेदखिलेश्वर कः प्रदक्षिणविधिस्ते ॥ १३ ॥**

வாத்யம் டமருப்ருதஸ்தே
    வாதயிதும் வா பரேऽஸ்தி கா ஶக்தி: ||
அபரிச்சின்னஸ்ய பவேதகிலேஶ்வர
    க: ப்ரதக்ஷிணவிதிஸ்தே || (13)

वा அல்லது, **डमरुभृतः ते** டமருகத்தை ஏந்திய உனக்கு முன் **वाद्यं** வாத்தியத்தை **वादयितुं** வாசிப்பதற்கு **परे** வேறொருவனிடத்தில் **का शक्तिः** என்ன திறமை **अस्ति** இருக்கிறது? **अखिलेश्वर** எல்லாவற்றிற்கும் ஈசுவரனாய் இருப்பவனே! **अपरिच्छिन्नस्य ते** பரிச்சேதித்துப் பிரிக்க வொண்ணாத (அளவுபடுத்த இயலாத) உன்னைக்குறித்து **कः प्रदक्षिणविधिः** எவ்விதம் பிரதக்ஷிணஞ் செய்வதாகிய நியமம் **भवेत्** இருக்கக்கூடும்?

What power is there in any person to play the drum before you who hold the *Damaru* (in your hand)? And, Lord of all! how can pradakshina (the rite of circumambulation) be performed round you, whose presence cannot be circumscribed in space?

**स्युस्ते नमांसि कथमिव शङ्कर परितोऽपि विद्यमानस्य ।
वाचामगोचरे त्वयि वाक्प्रसरो मे कथन्नु संभवतु ॥ १४ ॥**

ஸ்யுஸ்தே நமாம்ஸி கதமிவ
    ஶங்கர பரிதோऽபி வித்யமானஸ்ய |
வாசாமகோசரே த்வயி
    வாக்ப்ரஸரோ மே கதந்நு ஸம்பவது || (14)

வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

शङ्कर சங்கரனே! **परितः अपि** எல்லாப்புறத்திலும் **विद्यमानस्य** இருப்பவனை (காணப்படுவோனை) **ते** உனக்கு **नमांसि** நமஸ்காரங்கள் **कथं इव स्युः** எப்படி ஆகக்கூடும்? **वाचां अगोचरे त्वयि** வாக்குகளுக்கு எட்டாதவனை உன்னைப் பற்றி **वाक्प्रसरः** (ஸ்துதி) வார்த்தை வெளிப்படுவதானது **मे** எனக்கு **कथं नु संभवतु** எவ்வாறு தான் நேரக்கூடும்?

How can prostrations be made in front of you, O Sankara! when you surround me on all sides? How can words be uttered by me in praise of you who are beyond the range of speech?

नित्यानन्दाय नमो निर्मलविज्ञानविग्रहाय नमः ।
निरवधिकरुणाय नमो निरवधिविभवाय तेजसेऽस्तु नमः॥१५॥

நித்யானந்தாய நமோ
நிர்மலவிஜ்ஞானவிக்ரஹாய நம: |
நிரவதிகருணாய நமோ
நிரவதிவிபவாய தேஜஸேZஸ்து நம: || (15)

नित्यानन्दाय எப்பொழுதும் ஆனந்தமயமானவனுக்கு **नमः** நமஸ்காரம்; **निर्मलविज्ञानविग्रहाय** மாசில்லாத நல்ல அறிவே வடிவமானவனுக்கு **नमः** நமஸ்காரம்; **निरवधि-करुणाय** எல்லையில்லாத கருணையுடையவனுக்கு **नमः** நமஸ்காரம்; **निरवधिविभवाय** எல்லையில்லாத விபவங்களை (மேன்மைகளை, பெருமைகளை, திறமைகளை) யுடைய **तेजसे** சோதிவடிவனுக்கு **नमः अस्तु** நமஸ்காரம் அமைவதாகுக.

Obeisance to Him who is Eternal Bliss! Obeisance to Him whose Form is Immaculate

Wisdom! Obeisance to Him who is Boundless Grace! May Obeisance be to the Splendour whose glory is unbounded!

सरसिजविपक्षचूडस्सगरतनूजन्मसुकृतमूर्धाऽसौ ।
दृक्कूलङ्कषकरुणो दृष्टिपथे मेऽस्तु धवलिमा कोऽपि ॥ १६ ॥

ஸரஸிஜவிபக்ஷசூட:
ஸகரதனூஜன்மஸுக்ருதமூர்தாஸௌ |
த்ருக்கூலங்கஷகருணோ
த்ருஷ்டிபதே மேஸ்து தவலிமா கோபி ||

सरसिजविपक्षचूडः தாமரைக்குப் பகையான சந்திரனைத் திருமுடிக்கு ஆபரணமாக வுடையதும் **सगरतनूजन्मसुकृत-मूर्धा** ஸகரவம்சத்தில் பிறந்தவர்களைப் பாவனஞ்செய்த கங்கையைத் தலையிலே கொண்டதும் **दृक्कूलङ्कषकरुणः** கண்களினின்றும் கரைபுரண்டு வெள்ளமாய்ப் பெருகும் கருணையை வடிவமாயுடையதுமான **कः धवलिमा असौ** (ஒப்பற்ற) ஒரே வெண்மைப்பொருளான இது **अपि मे** எனக்கும் **दृष्टिपथे** கண்பார்வையில் **अस्तु** இருப்பதாகுக.

May that pure white Form be ever in my sight—that Form of His who wears the Moon as an ornament on His head, who holds on His head the Ganges which cleansed from sin the sons of Sagara, and from whose eyes grace flows in floods.

जगदाधारशरासं जगदुत्पादप्रवीणयन्तारम् ।
जगदवनकर्मठशरं जगदुद्धारं श्रयामि चित्सारम् ॥ १७ ॥

ஜகதாதாரஶராஸம்
ஜகதுத்பாதப்ரவீணயந்தாரம் |
ஜகதவனகர்மடஶரம்
ஜகதுத்தாரம் ஶ்ரயாமி சித்ஸாரம் || (17)

जगदाधारशरासं ஜகத்திற்கு ஆதாரமான மேருமலையை வில்லாகக் கொண்டவனும் **जगदुत्पादप्रवीणयन्तारं** ஜகத்தை உற்பத்தி செய்யும் வல்லமையுடைய பிரமனை தேரோட்டியாகக் கொண்டவனும் **जगदवनकर्मठशरं** ஜகத்தைக் காக்குந் தொழிலில் ஈடுபட்ட விஷ்ணுவை அம்பாகக் கொண்டவனும் **जगदुद्धारं** ஜகத்தை (ஆபத்திலிருந்து) கைதூக்கி விடுவோனுமான **चित्सारम** சின்மயப் பொருளானவனை **श्रयामि** ஆசிரயிக்கிறேன் (சரணமடைகிறேன்).

I take refuge in Him who is the Essence of Chit (knowledge), who upholds the world, whose arrow is Vishnu engaged in protecting the world, who wields (the mountain Meru) the world's pivot as His bow and who has Brahma the great world-creator as His charioteer.

कुवलयसहयुध्वगलैः कुलगिरिकूटस्थकुचभरार्धाङ्गैः ।
कलुषविदूरैश्चेतः कबलितमेतत् कृपारसैः कैश्च ॥ १८ ॥

குவலயஸஹயுத்வகலைஃ
குலகிரிகூடஸ்தகுசபரார்தாங்கைஃ |
கலுஷவிதூரைஶ்சேதஃ
கவலிதமேதத் க்ருபாரஸைஃ கைஶ்ச || (18)

कुवलयसहयुध्वगलैः நீலோத்பலத்தோடு போரிடும் கழுத்தையுடையவர்களும் **कुलगिरिकूटस्थकुचभरार्धाङ्गैः** குலபர்வதங்களுக்கு மூதாதைபோன்ற ஸ்தனபாரத்தைப் பாதியுடம்பிலேயுடையவர்களும் [**कुलगिरिकूटस्थकचिताधाङ्गैः** என்ற பாடத்திற்கு, 'குலபர்வதங்களின் கொடுமுடிகளிலேயுள்ள பனிக்கட்டியால் (பார்வதி தேவியால்) மூடப்பெற்ற பாதியுடம்பை யுடையவர்களும்' என்பது

பொருள்.] **कलुषविदूरैः** துன்பங்களுக்கு அப்பால் உள்ளவர்களும் **कृपारसैः** கிருபை என்னும் அமுதத்தை யுடையவர்களுமான **कैः च** ஒருவர்களாலேயே **एतत् चेतः** இந்த மனமானது **कवलितम्** விழுங்கப்பட்டு ஒழிந்தது.

My mind is swallowed up by One who is beyond sorrow, who is full of overflowing compassion, whose neck rivals the blue lily (in hue) and whose body has on one side the breast (of Uma) which is the prime pattern of the great mountains.

वसनवते करिकृत्त्या वासवते रजतशैलशिखरेण ।
वलयवते भोगभृता वनितार्धाङ्गाय वस्तुनेऽस्तु नमः ॥ १९॥

வஸனவதே கரிக்ருத்த்யா
　　வாஸவதே ரஜதஶைலஶிகரேண |
வலயவதே போகப்ருதா
　　வனிதார்தாங்காய வஸ்துனே஽ஸ்து நம: | (19)

करिकृत्त्या யானைத்தோலால் **वसनवते** ஆடையையுடையதும் **रजतशैलशिखरेण** வெள்ளி மலையின் கொடுமுடியால் **वासवते** வாஸஸ்தானமுடையதும் **भोगभृता** ஸர்ப்பங்களால் **वलयवते** வளையல்களை யுடையதுமாயுள்ள **वनितार्धाङ्गाय** பெண்ணைப் பாதியுடலாகக் கொண்ட **वस्तुने** பொருளுக்கு **नमः अस्तु** நமஸ்காரம் இருக்கட்டும்.

May (my) obeisance be to That Being who has the elephant's skin as garment, the lofty peak of the Silver Mountain as residence, the serpents as bangles, and a lovely woman as half His body!

सरसिजकुवलयजागरसंवेशनजागरूकलोचनतः ।
सकृदपि नाहं जाने सुरमितरं भाष्यकारमञ्जीरात् ॥ २० ॥

ஸரஸிஜகுவலயஜாகர—
ஸம்வேஶனஜாகரூகலோசனத: |
ஸக்ருதபி நாஹம் ஜானே
ஸுரமிதரம் பாஷ்யகாரமஞ்ஜீராத் || (20)

सकृत् ஏககாலத்தில் **सरसिज - कुवलय - जागर - संवेशन - जागरूक - लोचनतः** தாமரை, குவளை இவற்றின் மலர்தல் விஷயத்திலும் கூம்புதல் விஷயத்திலும் ஜாக்கிரதையுடனிருக்கும் கண்களையுடையவனும் **भाष्यकारमञ्जीरात्** பாஷ்யகாரரான பதஞ்ஜலியை* நூபுரமாக வுடையவனுமான சிவபிரானைக் காட்டிலும் **इतरं सुरं** வேறொரு தேவனை **अहं** நான் **न जाने** அறியேன்.

'சிவபிரானைத் தவிர வேறு தெய்வம் இல்லை' என்பது கருத்து.

I do not know any God other than Him who with His open eyes watches the blooming and fading of the lotus and the lily at once and whose anklet became the Bhashyakara.

Note—His open eyes are the sun and the moon. The sun causes the lotus to bloom and the lily to fade; and the moon causes the lily to bloom and the lotus to fade. The Bhashyakara is a reference to Patanjali, the author of the

* பாஷ்யகாரர் என்பது ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களையும் ஸ்ரீகண்டரையும் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

Vyakarana commentaries, who as serpent adorns Nataraja's foot as a tinkling anklet.

आपाटलजाटानामानीलच्छायकन्धरासीम्नाम् ।
आपाण्डुविग्रहाणामाद्रुहिणं किङ्करा वयं महसाम् ॥२१॥

ஆபாடலஜாடானா—
மானீலச்஛ாயகந்தராஸீம்னாம் |
ஆபாண்டுவிக்ரஹாணா—
மாத்ருஹிணம் கிங்கரா வயம் மஹஸாம் || (21)

आपाटलजाटानां (பாதிரிப்பூப்போன்ற) சிறிதே சிவந்த சடையையுடையவர்களும் **आनीलच्छायकन्धरासीम्नां** கழுத்தின் பின்புறம் வரையிலே பரவிய நீலநிறத்தின் காந்தியையுடையவர்களும் **आपाण्डुविग्रहाणां** வெண்ணிற மேனியையுடையவர்களுமான **महसां** சோதிமூர்த்திகளுக்கு **आद्रुहिणं वयं** பிரமன் முதற்கொண்டு நாங்கள் (எல்லாரும்) **किङ्कराः** சேவகஞ் செய்பவர்கள்.

To that Splendour whose form is white, whose matted hair is slightly red like the Patali flower and the blueness of whose neck stretches to the nape—we from Brahma downwards are all slaves.

मुषितस्मरावलेपे मुनितनयायुर्वदान्यपदपद्मे ।
महसि मनो रमतां मे महति दयापूरमेदुरापाङ्गे ॥२२॥

முஷிதஸ்மராவலேபே
முனிதனயாயுர்வதான்யபதபத்மே |
மஹஸி மனோ ரமதாம் மே
மஹதி தயாபூரமேதுராபாங்கே || (22)

मुषितस्मरावलेपे மன்மதனுடைய கர்வத்தை அபகரித்தவனும் **मुनितनयायुर्वदान्यपदपद्मे** முனி குமாரனுக்கு (மார்க்கண்டேயனுக்கு) ஆயுளை அளித்த வள்ளலான திருவடித்தாமரையையுடையவனும் **दयापूरमेदुरापाङ्गे** தயையாலே நிறைந்து மெதுவான (நெய்த்த, ஈரித்த] கடைக் கண்களையுடையவனுமான **महति महसि** பெருஞ்சோதி மூர்த்தியிடத்தில் **मे** என் **मनः** மனது **रमताम्** இன்புறுவதாகுக.

May my heart rejoice in that great Splendour, who humbled the God of Love, whose lotus-feet gave life to the sage's son (Markandeya), and the corners of whose eyes are moist with overflowing grace.

शर्मणि जगतां गिरिजानर्मणि सप्रेमहृदयपरिपाके ।
ब्रह्मणि विनमद्रक्षणकर्मणि तस्मिन्नुदेतु भक्तिर्मे ॥ २३ ॥

ஶர்மணி ஜகதாம் கிரிஜா—
நர்மணி ஸப்ரேமஹ்ருதயபரிபாகே |
ப்ரஹ்மணி விநமத்ரக்ஷண—
கர்மணி தஸ்மின்னுதேது பக்திர்மே ॥ (23)

जगतां ஜகத்திற்கு **शर्मणि** இன்பமயமானவனும் **गिरिजानर्मणि** பார்வதி தேவியோடு இன்புறுவோனும் **सप्रेमहृदयपरिपाके** பிரேமையால் இருதயம் இளகிப் பக்குவமானவனும் **विनमद्रक्षणकर्मणि** (தன்னை) வணங்குவோரைக் காப்பாற்றுவதையே தொழிலாகக் கொண்டவனுமான **तस्मिन् ब्रह्मणि** அந்த பரப்ரம்மணிடத்தில் **मे** எனக்கு **भक्तिः** பக்தியானது **उदेतु** எழுவதாகுக (உதிக்கவேண்டும்).

May devotion arise in me towards that Brahman who causes the world's happiness, who delights in Girija (the daughter of the Himalaya Mountain), whose heart is tender with love, and whose work is the salvation of His worshippers.

अस्मिन्नपि समये मम कण्ठच्छायाविधूतकालाभ्रम् ।
अस्तु पुरो वस्तु किमप्यर्धाङ्गेदारमुन्मिषन्निटिलम् ॥२४॥

அஸ்மின்னபி ஸமயே மம
கண்டச்சாயாவிதூதகாலாப்ரம் |
அஸ்து புரோ வஸ்து கிம—
ப்யர்தாங்கேதாரமுன்மிஷன்னிடிலம் || (24)

कण्ठच्छायाविधूतकालाभ्रं கழுத்தின் நிறத்தால் கார மேகத்தை வென்றதும் अर्धाङ्गेदारं திருமேனியிற் பாதியிலே மனைவியை யுடையதும் उन्मिषन्निटिलं விழிக்கும் (ஒளிரும்) நெற்றியையுடையதுமான किं अपि वस्तु சொல்லவொண்ணாத ஒரு பொருள் अस्मिन् अपि समये இந்த வேளையிலும் मम पुरः என் முன்பாக अस्तु இருப்பதாகுக.

May that Being appear even now before me, the darkness of whose neck transcends the rain-cloud's hue, a half of whose body is His Devi (spouse) and whose forehead has an eye.

जटिलाय मौलिभागे जलधरनीलाय कन्धराऽऽभोगे ।
धवलाय वपुषि निखिले धाम्ने स्यान्मामको नमोवाकः॥२५॥

ஜடிலாய மௌலிபாகே
ஜலதரநீலாய கந்தராऽऽபோகே |
தவலாய வபுஷி நிகிலே
தாம்னே ஸ்யான் மாமகோ நமோவாக: || (25)

मौलिभागे தலையில் (குடுமியிருக்குமிடத்தில்) **जटिलाय** ஜடையையுடையவனும் **कन्धराऽऽभोगे** கழுத்துப் பிரதேசத்திலே **जलधरनीलाय** நீருண்ட மேகத்தைப்போன்ற கருநீல நிறமுடையவனும் **निखिले वपुषि** திருமேனி முழுவதிலும் **धवलाय** வெண்ணிறமுடையவனுமான **धाम्ने** சோதிமூர்த்தியினிடத்து **मामकः नमोवाकः** நான் கூறும் நமஸ்காரம் **स्यात्** அமைவதாகுக.

May my words of obeisance be for that Splendour whose body is all white, whose hair is matted (*Jata*) and whose neck is dark-blue like the rain-cloud.

अकरविराजत्सुमृगैरवृषतुरङ्गैरमौलिधृतगङ्गैः ।
अकृतमनोभवभङ्गैरलमन्यैर्जगति दैवतापशदैः ॥ २६ ॥

அகரவிராஜத்ஸும்ருகை:
அவ்ருஷதுரங்கைரமௌலித்ருதகங்கை: |
அக்ருதமநோபவபங்கை:
அலமன்யைர்ஜகதி தைவதாபஶதை: || (26)

अकरविराजत्सुमृगैः அழகிய மான் ஒன்று பிரகாசியாத கையையுடையவர்களும் **अवृषतुरङ्गैः** காளையைப் பரியாகக் கொள்ளாதவர்களும் (ரிஷபவாஹனமில்லாதவர்களும்) **अमौलिधृतगङ्गैः** திருமுடியிலே கங்கையைத் தாங்காதவர்களும் **अकृतमनोभवभङ्गैः** மன்மதனைப் பங்கப்படுத்தாதவர்களுமான **दैवतापशदैः अन्यैः** (பரமேசுவரனைத் தவிர்த்த) நீச தெய்வங்களான மற்றவர்களால் **जगति** உலகத்தில் **अलं** தேவையில்லை.

Enough in this world of the lesser gods whose hands shine not with antelopes, who ride not on bulls, who have not subdued (the God of) Love and who are not crowned with the Ganges.

कस्मै वच्मि दशां मे कस्येदृग्घृदयमस्ति शक्तिर्वा ।
कस्य बलं चोद्धर्तुं क्लेशात् त्वामन्तरा दयासिन्धो ॥ २७ ॥

கஸ்மை வச்மி தஶாம் மே
கஸ்யேத்ருக்ருதயமஸ்தி ஶக்திர்வா |
கஸ்ய பலம் சோத்(த்)தும்
க்லேஶாத் த்வாமந்தரா தயாஸிந்தோ || (27)

दयासिन्धो *தயா சமுத்திரமா யிருப்பவனே!* **त्वाम् अन्तरा** *உன்னைத்தவிர்த்து* **कस्मै** *யாருக்கு* **मे** *என்* **दशां** *(கஷ்டதசையை) நிலைமையை* **वच्मि** *சொல்லுவேன்?* **कस्य** *யாருக்கு* **ईदृक् हृदयं** *இத்தகைய இருதயமோ* **शक्तिः वा** *சக்தியோ* **अस्ति** *உண்டு?* **च** *மேலும்,* **क्लेशात्** *துன்பத்தினின்றும்* **उद्धर्तुं** *கைதூக்கிவிடுவதற்கு* **कस्य** *யாருக்கு* **बलं** *பலம் (உண்டு)?*

Ocean of Mercy! To whom but you shall I complain of my predicament? Who has such a heart or such power? And who has the strength, to lift me from misery?

याचे ह्यनभिनवं ते चन्द्रकलोत्तंस किञ्चिदपि वस्तु ।
मह्यं प्रदेहि भगवन् मदीयमेव स्वरूपमानन्दम् ॥ २८ ॥

யாசே ஹ்யனபிநவம் தே
　　சந்த்ரகலோத்தம்ஸ கிஞ்சிதபி வஸ்து |
மஹ்யம் ப்ரதேஹி பகவன்
　　மதீயமேவ ஸ்வரூபமானந்தம் || (28)

चन्द्रकलोत्तंस சந்திரகலையை திருமுடியில் ஆபரணமாகத் தரிப்பவனே! **अपि किञ्चित् अनभिनवं वस्तु** பழைய பொருள் ஒன்றையே **ते याचे** உன்னிடம் யாசிக்கிறேன்; **भगवन्** பகவானே! **मदीयम् स्वरूपम् आनन्दम् एव** என்னுடையதான ஆனந்த ஸ்வரூபத்தையே **मह्यं** எனக்கு **प्रदेहि** கொடுப்பாயாக.

You whose crown is the crescent Moon! I beg you for no new gift at all. Only, O Lord, give me (back) my own Self which is Bliss.

भगवन् बालतया वाऽभक्त्या वाऽप्यापदाकुलतया वा ।
मोहाविष्टतया वा माऽस्तु च ते मनसि यद्दुरुक्तं मे॥२९॥

பகவன் பாலதயா வாZ
　　பக்த்யா வாZப்யாபதாகுலதயா வா |
மோஹாவிஷ்டதயா வா
　　மாZஸ்து ச தே மனஸி யத்துருக்தம் மே ||

भगवन् பகவானே! **बालतया वा** சிறு பிள்ளைத்தனத்தாலோ **अभक्त्या वा** அல்லது பக்தியின்மையாலோ **आपदाकुलतया वा** ஆபத்துக்களாலே மனங்கலங்கியதாலோ **मोहाविष्टतया** மோஹம் (அஜ்ஞானம்) என்னுள்ளே புகுந்து கொண்டிருப்பதாலோ **यत् मे दुरुक्तं** என்னாலே சொல்லப்பட்ட புன்சொல்லானது **ते** உன்னுடைய **मनसि च** மனதிலே **मा अस्तु** இல்லாமற் போகட்டும்.

God! Whatever foul words I have uttered, whether childishly or impiously, bewildered by calamity or impelled by ignorance—let them not stay in your mind.

यदि विश्वाधिकता ते यदि निगमागमपुराणयाथार्थ्यम् ।
यदि वा भक्तेषु दया तदिह महेशाशु पूर्णकामः स्याम्॥ ३०॥

யதி விஶ்வாதிகதா தே
யதி நிகமாகமபுராணயாதார்த்யம் |
யதி வா பக்தேஷு தயா
ததிஹ மஹேஶாஶு பூர்ணகாம: ஸ்யாம் || (30)

महेश மஹேசுவரனே! **यदि ते विश्वाधिकता** உனக்கு எல்லாவற்றிற்கும் மேலாகிய தன்மையுண்டு என்றால் **यदि निगमागमपुराणयाथार्थ्यम्** வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் இவை உண்மையானவை என்றால், **वा** அல்லது **यदि भक्तेषु दया** பக்தர்களிடத்தில் (உனக்கு) தயை உண்டு என்றால், **तत्** அதனால் **इह** இங்கே **आशु** அதிசீக்கிரத்திலே **पूर्णकामः** விருப்பங்கள் முழுமையும் நிறைவேறினவனாக **स्याम्** ஆவேன்.

If indeed you are the Lord of the universe (and transcend it), if the Vedas, the Agamas and the Puranas are real truth and if you have compassion on your devotees, then, O great God, then indeed, my desires are even now fulfilled.

குறிப்பு:—இந்த ஸ்தோத்திரத்திலே 15, 25, 16, சுலோகங்கள் ஸ்ரீ ஜகந்நாதரின் ஆர்யாஸ்வதராஜ

என்னும் ஸ்தோத்திரத்திலேயுள்ள 113, 120, 137 ச்லோகங்களை ஒத்துள்ளன. 18-வது ச்லோகத்திலே **कुलगिरिकूटस्थकवलिताङ्घ्रिः** என்ற அசுத்தமான பாடமாகத் தோன்றுவதால், **कुलगिरिकूटस्थकुम्भभराङ्घ्रिः** என்ற பாடம் ஊகித்துக்கொள்ளப் பெற்றது.

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीपरमशिवेन्द्रार्य-
पूज्यपादशिष्य श्रीसदाशिवब्रह्मेन्द्रकृतिषु
शिवमानसिकपूजा सम्पूर्णा ॥

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ பரமசிவேந்த்ரார்ய
பூஜ்ய பாதர்களின் சிஷ்யர்களான ஸ்ரீ ஸதாசிவ
ப்ரஹ்மேந்த்ரர்கள் அருளிய நூல்களுள்
சிவ மானஸிக பூஜை முற்றிற்று.

श्रीसदाशिवब्रह्मेन्द्रविरचितानि

॥ कीर्तनानि ॥

ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்கள்

இயற்றிய

கீர்த்தனங்கள்

---

१. कल्याणीरागः आदितालम् ॥ भज रे गोपालम् ॥

भज रे गोपालम्—मानस, भज रे गोपालम्

भज गोपालं भजितकुचेलं त्रिजगन्मूलं दितिसुतकालं (भज)

आगमसारं योगविचारं भोगशरीरं भुवनाधारं (भज)

कदनकठोरं कलुषविदूरं मदनकुमारं मधुसंहारं (भज)

नतमन्दारं नन्दकिशोरं हतचाणूरं हंसविहारं (भज)

1. கல்யாணி ராகம்: ஆதி தாளம்: பஜ ரே கோபாலம்

பஜ ரே கோபாலம்—மானஸ, பஜ ரே கோபாலம்

பஜ கோபாலம் பஜிதகுசேலம்
த்ரிஜகன்மூலம் திதிஸுதகாலம் (பஜ)

ஆகமஸாரம் யோகவிசாரம்
போகசரீரம் புவனாதாரம் (பஜ)

கதனகடோரம் கலுஷவிதூரம்
மதனகுமாரம் மதுஸம்ஹாரம் (பஜ)

நதமந்தாரம் நந்தகிசோரம்
ஹதசாணூரம் ஹம்ஸவிஹாரம் (பஜ)

(இதை ஹிந்தோளத்தில் பாடுகிறார்கள்)

गोपालं கோபாலனை **भज** வழிபடுவாய் (வணங்குவாய்) **रे मानस** மனமே! **गोपालं** கோபாலனை **भज** வணங்குவாய் **भजितकुचेलं** குசேலரால் பூஜிக்கப் பெற்றவனும் **त्रिजगन्मूलं** மூன்று உலகங்களுக்கும் மூல காரணமானவனும் **दितिसुत-कालं** அசுரர்களுக்கு இயமனாயிருப்பவனுமான **गोपालं** கோபாலனை **भज** வணங்குவாய்.

आगमसारं வேதங்களின் உட்பொருளானவனும் **योगविचारं** யோகத்தால் ஆராய்ந்த பொருளானவனும் **भोगशरीरं** ஆனந்தானுபவத்திற்காக [ஆனந்த மயமான] சரீரத்தைக் கொண்டவனும் **भुवनाधारं** உலகங்களைத் தாங்குவோனுமாகிய **गोपालं** கோபாலனை **भज** வணங்குவாய்.

कदनकठोरं பாபங்களைக்கடிந்து போக்குவோனும் **कलुषविदूरं** மனக் கலக்கத்தை நீக்குவோனும் **मदनकुमारं** மன்மதனைக் குமாரனாகவுடையவனும் **मधुसंहारं** மது என்னும் அரக்கனை அழித்தவனுமான **गोपालं** கோபாலனை **भज** வணங்குவாய்.

नतमन्दारं வணங்குவோருக்கு மந்தாரமென்னும் கல்ப விருக்ஷமானவனும் **नन्दकिशोरं** நந்தகோபனுக்குக்குழந்தையானவனும் **हतचाणूरं** சாணூரன் என்னும் மல்லனைக் கொன்றவனும் **हंसविहारं** [அன்னங்களோடு] பரமஹம்ஸர்களோடு விளையாடுவோனுமான **गोपालं** கோபாலனை **भज** வணங்கிப் பக்தி செய்வாய்.

Worship Gopala, O my mind! Worship Gopala.

Worship Gopala, the Root-Cause of the three worlds, who was Death to the Asuras and who was worshipped by Kuchela.

Worship Him who is the Quintessence of the Vedas, who is sought by Yoga, whose body is Bliss and who is the support of the worlds.

Worship Him who chastises sin and dispels ignorance, whose son is the God of Love and who destroyed the (the asura) Madhu.

Worship Him, the son of (the cowherd) Nanda, who is the Mandara (the wishing tree of Heaven) to His worshippers, who killed (the wrestler) Chanura and who delights in the company of (the great Swans) the Parama Hamsas.

२. कापिरागः आदितालम् ॥ स्मर वारं वारम् ॥

स्मर वारं वारम्—चेतः, स्मर नन्दकुमारम्

घोषकुटीरपयोघृतचोरं गोकुलबृन्दावनसंचारम् (स्मर)
वेणुरवामृतपानकठोरं विश्वस्थितिलयहेतुविहारम् (स्मर)
परमहंसहृत्पञ्जरकीरं पटुतरधेनुबकसंहारम् (स्मर)

2. காபி ராகம் : ஆதி தாளம் : ஸ்மர வாரம் வாரம்

ஸ்மர வாரம் வாரம்—சேத:, ஸ்மர நந்தகுமாரம்

கோஷகுடீரபயோக்ருத-சோரம்
கோகுல-ப்ருந்தாவன-ஸஞ்சாரம் (ஸ்மர)
வேணுரவாம்ருத-பானகடோரம்
விஶ்வஸ்திதிலயஹேது-விஹாரம் (ஸ்மர)
பரமஹம்ஸஹ்ருத்-பஞ்ஜரகீரம்
படுதரதேனு-பகஸம்ஹாரம் (ஸ்மர)

चेतः மனமே! **वारं वारं** அடிக்கடி **नन्दकुमारं** நந்த கோபனுக்குப் பிள்ளையான கிருஷ்ணனை **स्मर** ஸ்மரணஞ் செய் (நினை).

घोषकुटीरपयोघृतचोरं இடைச்சேரிக் குடிசைகளிலே பாலையும் நெய்யையும் களவாடியவனும் **गोकुलबृन्दावनसंचारं** கோகுலம், விருந்தாவனம் இவ்விடங்களிலே திரிந்தவனுமான **नन्दकुमारं** கிருஷ்ணனை **स्मर** நினை.

वेणुरवामृतपानकठोरं புல்லாங்குழலோசையாகிய அமுதபானத்தால் நிரம்பியவனும் **विश्वस्थितिलयहेतुविहारं** உலகனைத்தையும் நிலைபெறச்செய்தல் அழித்தல் ஆக்கல் ஆகியவற்றிற்குக் காரணமான விளையாட்டுகளையுடையவனுமான **नन्दकुमारं** கிருஷ்ணனை **स्मर** நினை.

परमहंसहृत्पञ्जरकीरं பரமஹம்ஸர்களின் இருதயமாகிற கூட்டிலேயுள்ள கிளிபோன்றவனும் **पटुतरधेनुबकसंहारं** பலிஷ்டர்களான தேனுகாசுரன், பகாசுரன் இவர்களை [வெகு நன்றாக] அழித்தவனுமான **नन्दकुमारं** கிருஷ்ணனை **स्मर** நினை.

Remember again and again, O my mind, remember the son of Nanda.

Remember Him who stole milk and ghee from the huts of the cowherds and wandered all over Gokula and Brindavan.

Remember Him who is full of the sweet (nectar-like) melody of the flute and whose sports sustain the universe, and destroy and create it again.

Remember Him who is the Parrot encaged in he hearts of the Paramahamsas and who (utterly), destroyed the powerful asuras, Dhenuka and Baka.

३. सुरुटिरागः आदितालम् ॥ ब्रूहि मुकुन्देति ॥

ब्रूहि मुकुन्देति—रसने, ब्रूहि मुकुन्देति

केशव माधव गोविन्देति कृष्णानन्द सदानन्देति (ब्रूहि)

राधारमण हरे रामेति राजीवाक्ष घनश्यामेति (ब्रूहि)

गरुडगमन नन्दकहस्तेति खण्डितदशकन्धरमस्तेति (ब्रूहि)

अक्रूरप्रिय चक्रधरेति हंसनिरञ्जन कंसहरेति (ब्रूहि)

3. ஸுருடி ராகம்: ஆதி தாளம்: ப்ரூஹி முகுந்தேதி.

ப்ரூஹி முகுந்தேதி—ரஸனே, ப்ரூஹி முகுந்தேதி

கேஶவ மாதவ கோவிந்தேதி
கிருஷ்ணானந்த ஸதானந்தேதி (ப்ரூ)

ராதாரமண ஹரே ராமேதி
ராஜீவாக்ஷ கனஶ்யாமேதி (ப்ரூ)

கருடகமன நந்தகஹஸ்தேதி
கண்டிததஶகந்தரமஸ்தேதி (ப்ரூ)

அக்ரூரப்ரிய சக்ரதரேதி
ஹம்ஸநிரஞ்ஜன கம்ஸஹரேதி (ப்ரூ)

(செஞ்சுருட்டியில் பாடுகிறார்கள்)

मुकुन्द इति 'முகுந்தனே!' என்று ब्रूहि சொல்லு. रसने நாக்கே! मुकुन्द इति 'முகுந்தனே' என்று ब्रूहि சொல்லு.

केशव माधव गोविन्द इति 'கேசவனே! மாதவனே! கோவிந்தனே!' என்றும் कृष्ण आनन्द सदानन्द इति

கிருஷ்ணனே! ஆனந்த மயனே! எப்பொழுதும் ஆனந்தமுடையவனே!' என்றும் ब्रूहि சொல்லு.

राधारमण 'ராதாதேவியின் காதலனே!' हरे 'ஹரியே' राम 'இராமனே!'' इति என்றும் राजीवाक्ष 'தாமரைக் கண்ணா!' घनश्याम 'மேகம் போன்ற கருநிறமுடையவனே' इति என்றும் ब्रूहि சொல்லு.

गरुडगमन नन्दकहस्त इति 'கருடனை ஏறிச் செல்வோனே! நந்தகமென்னும் வாளைக்கையிற்கொண்டவனே!' என்றும் खण्डितदशकन्धरमस्त इति 'தசக்கிரீவனுடைய (இராவணனுடைய) தலைகளை வெட்டியெறிந்தவனே!' என்றும் ब्रूहि சொல்லு.

अक्रूरप्रिय 'அக்ரூரருக்கு நண்பனே!' चक्रधर 'திருச் சக்கிரத்தை ஏந்தியவனே!' इति என்றும் हंसनिरञ्जन 'ஹம்ஸம்போல மாசற்றவனே!' कंसहर 'கம்ஸனைக் கொன்றவனே!' इति என்றும் ब्रूहि சொல்லு.

Chant 'Mukunda! 'O my tongue! Chant 'Mukunda!'

Chant 'Kesava! Madhava! Govinda!' Chant 'Krishna! Bliss! Ever Blissful one!' Chant 'O Lover of Radha! Hari! Rama!' Chant 'O Lotus-eyed One, who is dark like the rain-cloud!'

Chant 'You who ride on Garuda, wielding the sword Nandaka!' 'You who cut off the heads of the ten-headed Ravana! Chant 'O friend of

Akrura!' O Wielder of the Discus!' 'O Spotless Swan!' 'Destroyer of Kamsa!'

४. नवरोज् रागः आदितालम् ॥ मानस संचर रे ॥

मानस संचर रे—ब्रह्मणि, मानस संचर रे

श्रीरमणीकुचदुर्गविहारे सेवकजनमन्दिरमन्दारे (मानस)
मदशिखिपिञ्छालंकृतचिकुरे महनीयकपोलविजितमुकुरे (मानस)
परमहंसमुखचन्द्रचकोरे परिपूरितमुरलीरवधारे (मानस)

4. நவரோஜ் ராகம்: ஆதி தாளம்: மானஸ ஸஞ்சர ரே.

மானஸ ஸஞ்சர ரே—ப்ரஹ்மணி மானஸ ஸஞ்சர ரே

ஸ்ரீரமணீகுசதுர்கவிஹாரே
ஸேவகஜனமந்திரமந்தாரே (மானஸ)
மதஶிகிபிஞ்சாலங்க்ருதசிகுரே
மஹநீய-கபோல-விஜிதமுகுரே (மானஸ)
பரமஹம்ஸமுகசந்த்ரசகோரே
பரிபூரிதமுரலீரவதாரே (மானஸ)

रे मानस அட மனமே! **संचर** உலாவுவாய். **ब्रह्मणि** பிரும்மத்தினிடம் **रे मानस** அட மனமே! **संचर** (ஸஞ்சரிப்பாய்) உலாவுவாய்.

श्रीरमणीकुचदुर्गविहारे ஸ்ரீதேவி என்னும் காதலியின் கொங்கைகளாகிய மலையரண்களிலே இன்புறுவதாயும் **सेवकजनमन्दिरमन्दारे** சேவகஞ் செய்வோர்களுக்கு (அடியார்களுக்கு) (வேண்டியவற்றை யெல்லாம் தரும் ஐந்து

கல்பக விருக்ஷங்களிலும் சிறந்த) மந்தார விருக்ஷமாயும் உள்ள (ब्रह्मणि பிரும்மத்திலிடம்)

मदशिखिपिञ्छालंकृतचिकुरे கர்வங்கொண்ட மயிலின் தோகையைத் திருமுடியிலே அலங்காரமாக அணிந்து கொண்டதும் महनीयकपोलविजितमुकुरे (பளபளப்பிலே) கண்ணாடியை வென்று சிறப்பு வாய்ந்த கன்னங்களை யுடையதுமான (ब्रह्मणि பிரும்மத்திலிடம்)

परमहंसमुखचन्द्रचकोरे பரமஹம்ஸர்களின் முகங்களாகிய சந்திரர்களைக் கண்ணால் பருகும் சகோர பக்ஷியாயும் परिपूरितमुरलीरवधारे முரளி என்னும் குழலிலிருந்து ஓசை தாரையாகப் பெருகுவதாயுமுள்ள (ब्रह्मणि பிரும்மத்திலிடம்)

O my mind! Be occupied with Brahman. O my mind! Be occupied.

With Him who delights in the high regions of the bosom of this Beloved Sridevi and who is the Mandara (the wishing tree of Heaven) planted in the residential quarters of His devotees.

With Him who wears as His crown the proud peacock's feathers and whose cheeks are praiseworthy as excelling the mirror. With Him who is the *Chakora* bird drinking in the bright beams from the faces of Paramahamsas, which resemble the moon, and from whom flows the flood of the melodies of the *Murali* flute.

५. कुन्तलवराली रागः आदितालम् ॥ गायति वनमाली ॥

गायति वनमाली—मधुरं गायति वनमाली

पुष्पसुगन्धिसुमलयसमीरे मुनिजनसेवितयमुनातीरे (गायति)

कूजितशुकपिकमुखखगकुञ्जे कुटिलालकबहुनीरदपुञ्जे (गायति)

तुलसीदामविभूषणहारी जलजभवस्तुतसद्गुणशौरी (गायति

परमहंसहृदयोत्सवकारी परिपूरितमुरलीरवधारी (गायति)

5. குந்தலவராலி ராகம் ஆதி தாளம்: காயதி வனமாலீ.

காயதி வனமாலீ—மதுரம், காயதி வனமாலீ

புஷ்பஸுகந்திஸுமலயஸமீரே
முனிஜனஸேவிதயமுனாதீரே (காயதி)

கூஜித-சுகபிக-முகககுஞ்ஜே
குடிலாலகபஹுநீரதபுஞ்ஜே (காயதி)

துலஸீதாமவிபூஷணஹாரீ
ஜலஜபவஸ்துதஸத்குணசௌரீ (காயதி)

பரமஹம்ஸஹ்ருதயோத்ஸவகாரீ
பரிபூரிதமுரளீரவதாரீ (காயதி)

वनमाली வனமாலையை யணிந்த கிருஷ்ணன் **गायति** பாடுகிறான்; **मधुरं** இனிதாய **वनमाली** கிருஷ்ணன் பாடுகிறான்.

पुष्पसुगन्धिसुमलयसमीरे பூக்களின் நறுமணத்தோடு கூடினதாகி மலயமலையினின்று வீசுந தென்றலையுடையதாய் **मुनिजनसेवितयमुनातीरे** (மனனசீலர்களான) முனிவர்கள் சென்று சேரும் யமுனா கரையிலே (**गायति** பாடுகிறான்.)

कूजितशुकपिकमुखखगकुञ्जे கிளி, குயில் (சுகப்ரம்மம் என்னும் குயில்) முதலான பறவைகள் கூவுந்தோட்டங்

களையுடையதாய் कुटिलालकवहुनीरदपुञ्जे நெற்றியிலே படியும் சுருட்டை மயிர்போன்ற மேகக்கூட்டங்களையுடையதான யமுனைக்கரையிலே (गायति பாடுகிறான்).

तुलसीदामविभूषणहारी துளசி மாலையை அணியாகக் கொண்டு மனதைக் கவர்கின்றவனும் जलजभवस्तुतसद्गुण शौरी (தாமரையில்) பிறந்த பிரமனால் துதிக்கப்பெற்ற நற்குணங்களையுடையவனை சூர வம்சத்தில் அவதரித்த கிருஷ்ணன் (गायति பாடுகிறான்.)

परमहंसहृदयोत्सवकारी பரமஹம்ஸர்களின் இருதயங்களைக் களிப்புறச் செய்பவனும் परिपूरितमुरलीरवधारी முரளி என்னும் புல்லாங்குழலிலே நிரப்பப்பெற்று தாரையாகப் பெருகும் சுழலோசையை யுடையவனுமான கிருஷ்ணன் (गायति பாடுகிறான்).

Sri Krishna (who wears the garland *Vanamālā*) is singing; sweetly, Sri Krishna is singing.

On the Jumna's bank where sages meditate in silence and where the gentle breezes from the Malaya hills blow, rich with the fragrance of flowers, (Sri Krishna sings.)

